**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**Ar.O.P.No.39/2021**

**நாள்.07.08.2024**

ம.சா.1 திரு.அதிவீரபாண்டியன் IA No.02/2024 அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் கோரிக்கைதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் சர்வே எண். 132/1B/2A ஆனது 2ம் எதிர்மனுதாரரால் கைப்பற்றப்பட்டது. அந்த வரைபடம் ம.சா.ஆ.6 ஆகும். எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை ம.சா.ஆ.6 இல் தனியாக கலர் செய்யப்பட்டுள்ளது. நயினார்கோவில் செல்லும் ரோடானது எனது ஆஜர்தம் செய்யப்பட்ட நிலத்தின் கிழபுறத்தில் உள்ளது. சர்வே எண். 218ல் சூரங்கோட்டை கிராமம் உள்ளது. அரசுத்தரப்பில் காட்டப்படும் Data Land–ஆன சர்வே எண்.202–ல் எவ்வித அடிப்படை வசதியும் கிடையாது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எனது முதல்விசாரணையின் சொன்னது போன்று சர்வே எண். 132/1B/2A ல் எந்த சாலையும் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 202/6 ஆனது எனது நிலத்திற்கு அருகில் உள்ளது என்றால் ஒரு பர்லாங் தள்ளி உள்ளது. இந்த வழக்கிற்காக நான் 202/6 ற்கு ஒரு பர்லாங் எனது நிலம் அமைந்துள்ளது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரோட்டிற்கும் எனது நிலத்திற்கும் நிறைய துாரம் உள்ளது என்றும் நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் சொன்னது போன்று எனது நிலத்தின் சாலை எதுவும் செல்லவில்லை என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .